## மானிட பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் உயர் கல்விக்கான தேசிய நிலையம். - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1:1 அபிப்பிராயம்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சல்களும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1:2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1:2:1. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

#### 2:1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிறுவனத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் ரூபா 149,080 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 435,775 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 584,855 வீழ்ச்சி காணப்பட்டது, கல்விக்கான படிகள் அதிகரித்தமையும் ஆலோசனை சேவைகளை வழங்குவது தொடர்பாக மேலதிகச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டமையும் இதற்கு விசேடமாகத் தாக்கமளித்துள்ளன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3:1. செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப்பரிசில் பெறுபவர் கலாநிதிப் பட்டத்தினை 03 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான கால எல்லைக்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டில் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளுக்கு புலமைப்பரிசில் பெறுகின்ற அறுபது நபர்களில் இருபத்து இரண்டு நபர்கள் 2006 ஆம் ஆண்டின் போதும் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளுக்கு புலமைப்பரிசில் பெறுகின்ற ஐம்பது நபர்களில் இருபத்து ஒரு நபர்களும் மீளாய்வாண்டின் இறுதிவரையும் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்திருக்கவில்லை.

(ஆ) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரையான காலத்தில் மானியம் வழங்கப்பட்டு பின்னர் இரத்துச் செய்யப்பட்ட 04 மானியம் பெறுபவர்கள் தொடர்பாகச் செலுத்தப்பட்ட மானியத்தில் ரூப 2,621,897 தொகை உரிய நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பட்டப்பின்படிப்பிற்கு புலமைப்பரிசில் பெறுகின்ற 04 நபர்களிடமிருந்து அரையாண்டு செயல்முன்னேற்ற அறிக்கைகளினை உரிய முறையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிதன்மையும் சிறந்த ஆளுகையும்

### (அ) கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2011-2015 காலத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிக்கும் போது பின்வரும் பிரிவுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள்

(ii) கடந்த 3 ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விளைவுகள் தொடர்பான மீளாய்வு

(iii) குறிக்கோள்களையும் இலக்குகளையுமு: அடைந்து கொள்வது தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்களைத் தெளிவாகக் காட்டும் வகையில் தயாரிக்கப்பபட்ட செயல்நடவடிக்கைத் திட்டம்.

(iv) செயலாற்றல் குறிகாட்டி

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 04 பயிற்சி செயலமர்வுகள், 03 கருத்தரங்குகள், 06 ஆராய்ச்சிக் கருத்தரங்குகளும் கூட்டங்களும் என்பவற்றை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் பயிற்சி செயலமர்வு, கருத்தரங்கு, கூட்டங்கள் என்பன 01 வீதம் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) புலமைப்பரிசில்கள் வழங்கல்

(ஆ) ஆட்சேர்ப்புக்கள்

(இ) மின்னியல் நூல் நிலையத்தைப் பேணுதல்